# அரசுதரப்பு சட்ட வழக்கறிஞர் அலுவலகத்திற்கான குரல்கொடுப்பு - சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசரத் தேவை

**2025 பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி**

2025 பெப்ரவரி மாத தொடக்கத்தில், இலக்கம் ட 92∴2009 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மூவரை விடுதலை செய்வது தொடர்பான சட்டமா அதிபரின் எண்ணப்பாடு குறித்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. குறித்த வழக்கானது சிரேஃட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலையுடன் சம்பந்தப்பட்டதோடு குறித்த வழக்கின் சந்தேக நபர்களை விடுவிக்க மேற்கொண்ட தீர்மானமானது சமூகத்தினரின் பல்வேறு விமர்சனங்களுக்கு வழிவகுத்தது. இது தொடர்பாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அவர்கள் சட்டமா அதிபரை சந்தித்தவேளையில் வழக்குத் தொடுப்பதற்கான போதிய ஆதாரமின்மை தொடர்பாக சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை தொடர்ந்தார் என தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அதன் விளைவாக குறித்த சந்தேகநபர்களின் விடுவிப்பானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. குறித்த இந்த சம்பவங்கள், சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் எந்தவொரு அரசியல் அழுத்தங்கலிளிருந்து அப்பாற்பட்டதாகவும், நீதியின் நலனடிப்படையில் எடுக்கப்படுவதனையும் உறுதிசெய்தனூடாக அரசதரப்பு சட்ட வழக்குரைஞர்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதன் அவசியத்தை கூர்மையாகக் கவனம் செலுத்துகிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (ஊீயு) தொடர்ந்தும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளின் மீதான சுயாதீன வழக்குதொடுதலை வலியுறுத்தியதுடன், பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதாக உறுதியளித்திருந்தபோதிலும் இன்னமும் பலவற்றில் எந்த முன்னேற்றமும் தென்படவில்லை. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையும் அவ்வாறானதொரு சம்பவமாகும். முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் மீதான விசாரணைகளில் அரசியல் செல்வாக்கு மற்றும் தலையிடும் சூழலில் இலங்கையில் சுதந்திரமானதொரு சட்டமா அதிபர் அலுவலகமொன்றை நிறுவுவதற்காக ஊீயு தொடர்ந்தும் குரல் கொடுத்தது.

நீதியைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பின்னடைவைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட மேற்குக்குறிப்பிட்ட அலுவலகமானது அரசியல் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் அரசியல் தலையீடுகளுக்கு வாய்ப்புள்ள வழக்குகளை தொடுப்பதற்கான தேவையான நிபுணத்துவம் மற்றும் வளங்களை கொண்டிருக்கவும் வேண்டும். தற்போதைய நீதித்துறை கட்டமைப்பை சீர்திருத்த வேண்டியதன் அவசியம் இருந்தபோதிலும், பொருத்தமான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாட்டில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் இயலாமை அல்லது விருப்பமின்மை காரணமாக சுதந்திரம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் வகையிலான ஒரு நீதி கட்டமைப்பை செயல்படுத்துவதற்கு முடியாமல்போனது. அதன் பின்னர் வந்த வேட்பாளரான திசாநாயக்க அவர்கள் தனது தேர்தல் காலத்தின்போது "நீதித்துறை அமைப்பில் உள்ள தாமதங்களை அகற்றுவதற்கான ஒரு பொறிமுறையாக அரசு சார்பாக வழக்குதொடுப்பதற்காகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து சுயாதீனமாக இயங்கும் வகையில் அரச வழக்குத்தொடுத்தல் இயக்குநரகம் (ஸீ) எனும் அலுவலகமொன்றை அறிமுகப்படுத்துவதோடு, பிரதானமான ஸீ தலைமை அலுவலகமொன்றையும், ஒவ்வொரு மாகாணங்களில் அதன் துணை அலுவலகங்களை நிறுவுதல்" எனும் தேர்தல்கால கொள்கை விளக்கவுரையின் உறுதிமொழியினை ஊீயு எடுத்துக்காட்டுகிறது.

மிக சமீபத்தில், சுயாதீன அரசதரப்பு சட்ட சட்ட வழக்குரைஞர் அலுவலகமொன்றை நிறுவுவதற்கான ஆரம்ப கட்டமாக நிபுணர் குழுவொன்றை நியமித்தலுக்கான நடவடிக்கைகளை நீதி மற்றும் தேசிய

ஒருமைப்பாடு அமைச்சர் மேற்கொண்டிருந்தார். அத்தகைய ஒரு செயல்முறையானது உள்ளடக்கிய தன்மையுடனும் பாதிக்கப்பட்டவர்கள், சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் பலர் உள்ளடங்கியதாக குறித்த நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு குரல்கொடுத்தவர்களின் பங்கேற்பையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என ஊீயு வலியுறுத்துகிறது. அவ்வாறானதொரு செயல்முறையானது நிலவும் முக்கிய பிரச்சினைகளில் அதிக கரிசனையுடனான கலந்துரையாடலுக்கு உதவுவதுடன், சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் ஆதரவாளர்களை ஈடுபடுத்துவதுடன் தற்போதைய அரசாங்கம் வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் உண்மையான அக்கறை கொண்டுள்ளது என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தும். மேலும், இவ்வாறானதொரு நடவடிக்கையானது, சீர்திருத்தங்கள் என்பவை இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காகவே அன்றி வெறுமனே சமூகத்தின் சில பிரிவினரை திருப்திப்படுத்துவதற்கான அடையாளச் சைகை அல்ல என்ற நம்பிக்கையையும் பொதுமக்களிடையே ஏற்படுத்தும்.

இத்தகைய பின்னணியில், அரசு வழக்குரைஞர் அலுவலகமொன்றின் அவசியத்தை வலியுறுத்தும் பின்னணியை விளக்கும் வகையில் பின்வரும் கேள்வி பதில் தொடரை தயாரித்துள்ளது. இந்த கேள்வி பதில் தொடர் முழுமையானதாக இல்லாவிடினும், அரசு சட்டத்தரணிகள் அலுவலகத்தை பற்றிய புரிதலுக்கான உரையாடலில் ஆக்கப்பூர்வமாக ஈடுபட பயன்படும் ஒரு ஆதாரமாக இது காணப்படும்.

## 1. தற்போதைய சட்டமா அதிபர் திணைக்களம் என்றால் என்ன?

இலங்கை அரசின் தலைமை சட்ட அதிகாரியே சட்டமா அதிபர் ஆவார். அவரது கடமைகள், சிறப்புரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் ஒரு தனித்துவமான அரசியலமைப்பு நிலை சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை அரசியலமைப்பு, பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் மரபுகள் மூலமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் அரசியலமைப்பின் உறுப்புரை 41ஊ யின் கீழ் நியமிக்கப்படுகிறார், நாட்டின் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் நியமிக்கப்படுவதைப் போலவே, இவரும் குடியரசின் தலைவரால் பரிந்துரைக்கப்படுவார், ஆனால் அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலின் பின்னரே நியமிக்கப்படுவார். சட்டமா அதிபரை பதவியிலிருந்து நீக்குவதானது 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அரச அதிகாரிகளை நீக்குதல (நடபடிமுறை) சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த சட்டத்தின் அடிப்படையில் சட்டமா அதிபரை பதவியிலிருந்து நீக்குவதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் மற்றும் விசாரணைக் ஆணைக்குழுவின் அறிக்கை ஆகியவற்றின் இரண்டினதும் அவசியத்தை உள்ளடக்கிய ஒரு செயல்முறைக்கு வழங்குகிறது.

சமீபத்தில், சட்டமா அதிபர் திணைக்களமானது அதிக வேலைப்பளுவையும் போதியளவு பணியாளர்களின்மையை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. வழக்குதொடுத்தலில் உள்ள தாமதங்கள் இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாகும், மேலும் இந்த விடயத்தின் மீதான விரைவுபடுத்துதலில் சட்டமா அதிபரின் அலுவலகம் பெரும் சவாலாக உள்ளது.

## 2. தற்போதைய சட்டமா அதிபர் வகிக்கும் பன்முகமான பாத்திரங்கள் யாவை?

எமது சட்ட கட்டமைப்பு பரப்பிற்குள் சட்டமா அதிபர் பல முக்கிய பாத்திரங்களை வகிக்கிறார்.

முதலாவதாக, நாட்டின் அரசு தரப்பு சட்ட **தலைமை சட்ட வழக்குரைஞர்** சட்டமா அதிபராவார். வழக்குகளைத் தொடுத்தல், தொடருதல் மற்றும் திரும்பப் பெறுதல் ஆகியவற்றில் அவருக்கு பரந்தளவான விருப்புரிமை உள்ளது என்பதே இதன் பொருளாகும். அரசின் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் குற்றமொன்றை புரிந்த வழக்குகளில் கூட, அந்த குற்றத்திற்காக வழக்கு தொடுப்பது தொடர்பாக தீர்மானிப்பதில் சட்டமா அதிபர் தனது விருப்புரிமையினை பயன்படுத்துகிறார். இருப்பினும்கூட இது பொதுமக்கள் நம்பிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எனவும், எனவே, சட்டமா அதிபரால் இந்த அதிகாரமானது ஒரு அடிப்படை உரிமையை மீறும் வகையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தல் அல்லது செய்யாமை வடிவில் புரியப்பட்டால் அவரது அத்தகைய நடவடிக்கை அல்லது செயலாற்றாமையினை அடிப்படை உரிமை மீறல் விண்ணப்பம் மூலம் சவாலுக்குட்படுத்தலாம் என நீதிமன்றங்கள் வழக்குகளில் தீர்த்துள்ளன.

இரண்டாவதாக, சட்டமா அதிபர் அரசியலமைப்பு ரீதியாக வலியுறுத்தப்பட்டுள்ளதன்படி **சட்ட வரைவு மற்றும் சட்டமூலங்களை நிறைவேற்றும் செயல்முறையில்** சில பாத்திரங்களை ஏற்க கடமைப்பட்டுள்ளார்.

வர்த்தமானியில் சட்டமூலமொன்று வெளியிடப்படுவதற்கு முன்பே, சட்ட மசோதா அதன் அரசியலமைப்புச் செல்லுபடிதன்மை தொடர்பாக சட்டமா அதிபரினால் மதிப்பாய்வு செய்யப்படும். பின்னர், பொதுமக்களில் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் சட்டமூலத்தின் அரசியலமைப்புச் செல்லுபடிதன்மையை சவால் செய்வாரானால், அத்தகைய சந்தர்ப்பத்தின்போது சட்டமா அதிபரிடம் அது தொடர்பாக வினவ உரிமையுண்டு, மேலும் இதன்போது பொதுவாக குறித்த சட்டமூலத்தை பாதுகாப்பதில் நிறைவேற்று அதிகாரியின் அதே நிலைப்பாட்டை சட்டமா அதிபர் கொண்டுள்ளமை நீண்டகால நடைமுறையாக காணப்படுகிறது.

மூன்றாவதாக, **அரசாங்கத்தின் சட்ட ஆலோசகர்** என்ற வகையிலும் சட்டமா அதிபர் செயல்படுகிறார். தற்போது, சட்டமா அதிபர் திணைக்களமானது அரசியலமைப்பு மற்றும் வர்த்தக அதிகார வரம்புகள் உள்ளிட்ட சிவில் மற்றும் குற்றவியல் விவகாரங்கள் தொடர்பாக மத்திய அரசு, மாகாண சபைகள், அரசாங்க திணைக்களங்கள், சட்ட சபைகள் மற்றும் பிற பகுதியளவு அரசு நிறுவனங்கள் போன்றவற்றிற்கு அவற்றின் ஆலோசனையின்பேரில் அல்லது திணைக்களம் அதன் சொந்த முயற்சியின் அடிப்படையில் சட்ட ஆலோசனையினை வழங்குகின்றது. இந்தப் பணியினை நிறைவேற்றுவதில், சட்டமா அதிபர் உள்நாட்டளவில் நீதித்துறை மற்றும் பகுதியளவு நீதிமுறை மன்றங்களில் அரசினை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமன்றி, சர்வதேச மன்றங்கள் அல்லது அமைப்புகளுக்கு முன்பாக உலகலாவிய ரீதியிலும் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பல்வேறு மனித உரிமை மன்றங்கள் அல்லது பொருளாதாரப் பேரவைகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பெரும்பாலும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கியவர்களாவர். இது தவிர, பல்வேறு சட்ட மற்றும் அரசியலமைப்பு சிக்கல் தொடர்பிலான விடயங்களில் பாராளுமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் ஆலோசனை வழங்க சட்டமா அதிபர் அழைக்கப்படுகிறார்.

## 3. இந்தப் பணிகளை செயல்படுத்தும் போது நலமுரண்பாடு எப்போது எழுகிறது?

அரசின் ஆலோசகர், அரசு தரப்பு சட்ட வழக்குரைஞர் மற்றும் அரச பிரதிநிதிகளுக்கான ஆலோசகர் போன்றவற்றில் சட்டமா அதிபர் தனது பதவியில் ஆற்றிய பணிகளில் பெரும்பாலும் நல முரண்பாட்டின் அடிப்படையில் எழுந்த சுதந்திரமின்மை காரணமாக விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன.

1999 ஆம் ஆண்டின் உயர்நீதிமன்ற ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி 44(1)(டி)ன்படி, அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான எந்தவொரு விண்ணப்பத்திலும் சட்டமா அதிபர் ஒரு பிரதிவாதியாக்கப்படுவதோடு, மேலும் பெரும்பாலும் ஜனாதிபதி, கபினட் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள், ஆணைக்குழு உறுப்பினர்கள், பல்வேறு அதிகார நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் சார்பில் நீதிமன்றிற்கு சட்டமா அதிபர் முன்னிலையாவார். ஒரு பக்கம் தமது பதவி கடமையாக இந்த அரச அதிகாரிகளை பாதுகாக்க வேண்டியுள்ளதோடு, மறுபக்கம் அவர்களைப் பொறுப்புக்கூற வைக்கவேண்டிய சூழ்நிலையிலும் பணியாற்றும்போது இங்கு இதுவொரு நலமுரண்பாட்டை தோற்றுவிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பொலிஸ் அதிகாரி அல்லது அரச அதிகாரி, சட்டமா அதிபரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்போது (தொடர பணிக்கும் நிலையில் கூட), அடிப்படை உரிமைகள் பரப்பில் சித்திரவதையிலிருந்தான சுதந்திரம் மீறப்பட்டதாக கண்டறியப்பட்டால், சட்டமா அதிபரின் அதே திணைக்களம் அந்த அதிகாரிமீது குற்றவியல் பொறுப்பினை சுமத்த வழக்குத்தொடுக்கும் என்று எதிர்பார்ப்பது நம்ப முடியாத கணிப்பாகும்.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையாளரான மோனிகா பின்டோ, 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கான தனது பயணத்தின் போது, சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்களிப்பை தனது முதற்கட்ட அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் விசாரணையில் ஆய்வு செய்தார். அரசின் தலைமை சட்ட ஆலோசகர் மற்றும் அரசதரப்பு சட்ட தலைமை வழக்குரைஞர் என்ற வகையில் சட்டமா அதிபர் ஆற்றிய இரட்டை வேடம் குறித்து அவர் தனது கவனத்தை வெளியிட்டிருந்தார். சட்டமா அதிபரின் பங்கு குறித்து கருத்து தெரிவித்த அவர், சட்டமா அதிபர் அரசின் பிரதிநிதியாக செயல்படுவதால் அரசின் நலன்களையே முதன்மையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதோடு மாறாக பொது நலன்களை அல்ல என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது. குறிப்பாக இது மறுபக்கம் அரசியல் ரீதியாக முக்கியதத்துவம் வாய்ந்த வழக்குகளில், வழக்குத்தொடுத்தலின் சுதந்திரத்தையும் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

## 4. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த பணிகள் சட்டமா அதிபரின் வெவ்வேறு செயல்பாடுகளை எவ்வாறு பாதிக்கின்றன?

சட்டமா அதிபர் தனது அனைத்து கடமைகளையும் தனது பணிகளுக்கு இடையிலான முரண்பாடு மற்றும் ஒற்றுமையின்மை காரணமாக நடுநிலையான, சுயாதீனமான மற்றும் ஆற்றல் மிக்க முறையில் பங்களிக்க முடியாதுள்ளது. சட்டமா அதிபரின் முரண்பட்ட கடமைகள் மற்றும் பணிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ள உண்மையான மற்றும்.·.அல்லது உணரப்பட்ட பக்கசார்பானது இலங்கையில் அரசதரப்பு சட்ட வழக்குத்தொடுத்தலின் சுதந்திரத்தையும் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. குறிப்பிடத்தக்க வகையில், இது அரசியல் தலையீடுகள் மற்றும் செல்வாக்கு காரணமாக நீதிபெற்றுக்கொடுத்தலுக்கு முட்டுக்கட்டையாகிறது. சட்டமா அதிபரின் விருப்புரிமைகள் மற்றும் அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடுகளும் மற்றும் சமநிலைபடுத்தல் இல்லாமையால் இது மேலும் சிக்கலாக்கப்படுகிறது.

மேலதிகமாக, இந்த உணரப்பட்ட பக்கசார்பு அல்லது நலமுரண்பாடானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயல்பாடுகளையும் அதன் வழக்குத்தொடுத்தல் தீர்ப்புகளையும் வழித்தற்றதாக்குகிறது. இதன் விளைவாக முறையான வழக்குத் தொடுத்தலினூடாக எடுக்கப்பட்டிருக்கக்கூடிய தீர்மானங்கள் கூட (கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையில்) அரசியல் செயற்பாட்டாளர்களின் விலக்களிப்பின்மை காரணமாக இந்த முடிவுகளின் நம்பகத்தன்மையைக் வழித்தற்றதாக்குகிறது.

## 5. திறனுள்ள அரசுதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்திற்கு தேவையான முக்கிய கொள்கைகள் யாவை?

முக்கியதத்துவம் வாய்ந்த வழக்குகளில் நியாயமான மற்றும் திறனுள்ள வகையிலான வழக்குத்ததொடுத்தலை உறுதி செய்வதில் அரசதரப்பு சட்ட சட்ட வழக்குரைஞர் அலுவலகம் முக்கிய பங்கினை வகிக்கிறது. ஒரு திறனுள்ள அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகமானது வழக்குதொடுத்தலில் இருந்தான இறுதி முடிவுகள் அரசியல் அல்லது வெளிப்புற செல்வாக்குகளில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதோடு .அரசாங்கத்தின் அரசியல் கிளைகள் மற்றும் அரசியல் நோக்கங்களிலிருந்து சுயாதீனமாக இயங்கவும் வேண்டும். மேலும், ஒரு சுயாதீன அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகமானது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்த உணர்திறன்கொண்ட வழக்குகளின் செயல்திறனை மேம்படுத்துவதோடு வழக்குரைஞர் தீர்மானங்களை மையப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் முடியுமாதல் வேண்டும். அரச அதிகாரிகள் அல்லது நிறுவனங்களுக்கு எதிரான முக்கிய வழக்குகளை தொடுத்தல் உள்ளிட்ட அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதற்கான ஒரு முக்கிய பொறிமுறை அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகம் ஆகும்.

அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் முறைமை வடிவமைப்பில், தேவையான கட்டுப்பாடுகள் மற்றும் இருப்புக்களை வைப்பதற்கு இலங்கையின் தனித்துவமான சூழலை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒரு அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகம் சுதந்திரமாகவும் திறனுள்ளதாகவும் அமைவதற்கு தேவையான சில ஒருங்கிணைந்த கொள்கைகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

**<u>பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் செல்வாக்கிலிருந்தான விலக்களிப்பு</u>**

அரசதரப்பு சட்ட வழக்குதொடுத்தலானது பாரபட்சமின்றியதாகவும் எந்தவொரு அரசியல் சார்பிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். இதனூடாக சட்ட அதிகாரிகளுக்கு அனைத்து மக்கள், நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு சமமாக சட்டத்தை நடைமுறைப்படுத்த கூடியதாக இருக்கும். பக்கச்சார்பற்ற தன்மையை உறுதி செய்வதற்கான கவனம் செலுத்துகையில் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளும் அடங்கும், சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட பணிக்காலம் போன்றவை செல்வாக்கு மற்றும் வெளிப்புற தாக்கங்கள் பற்றிய பயத்திலிருந்து நீதித்துறைகளை பாதுகாப்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாகும்.

**கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டில் சுதந்திரம்**

வழக்குறைஞர் துறையின் எந்தவொரு அலுவலகமும் அரசாங்கத்தின் ஏனைய பிரிவினரிடமிருந்து சுயாதீனமாக இயங்க வேண்டும். இ து அரசாங்க நடவடிக்கைகளின் பொறுப்புக்கூறல், தீர்மானமெடுப்பவர்களின் அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சரிபார்ப்புகள் மற்றும் நீதி அமைப்பின் வெளிப்படைத்தன்மை ஆகிய ஜனநாயக அரசின் ஆளுகைக்குள் அதிகாரப்பிரிவை மீண்டும் உறுதிப்படுத்தும் ஒன்றாகவும் அமைகிறது.

வழக்குரைதல் தீர்மானங்கள் சிக்கலானதுடன் பல ஒன்றுக்கொன்று முரண்படும் கருதுநிலைகள் மற்றும் உரிமைகளை சமநிலைப்படுத்தவும் வேண்டி அமையும். இதுபோன்ற பணியில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்களிலிருந்தும், எதிர்காலத்தில் அரசியல் பழிவாங்கக்கூடும் என்ற அச்சத்தில் இருந்தும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

**பொதுமக்களுடனான நம்பிக்கையை உருவாக்குதல்**

பொதுமக்கள் அரசதரப்பு சட்ட வழக்குதொடுத்தல் என்பது குற்றவியல் நடத்தைக்கான தண்டனையை பெற்றுத்தரும் சமூகத்தின் முக்கிய வழிமுறை பற்றிய கொள்கை என்பதோடு, அரசாங்கத்தின் நீதி நிர்வாகத்தை பற்றிய பொது மக்களின் நம்பிக்கையை வலுசேர்ப்பதிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில், வழக்குத்தொடுத்தல் கட்டமைப்பானது எந்த வடிவில் தனது பங்கினை மேற்கொண்டாலும், அது பொதுமக்கள் நலன்களுக்கே முதன்மையான சேவை வழங்குவதுடன், நீதி கட்டமைப்பின் அணுகல் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதிலும் அது முனைப்பாக செயற்படுகின்றது.

**போதுமான வளப்பெறுகை மற்றும் பயிற்சி**

அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்திற்கு சட்ட மற்றும் நிர்வாக தகுதிகளில் சுயாதீனமான நிதி வளப்பெறுகை, பரந்த மற்றும் விரிவான ஆட்சேர்ப்பு செயன்முறைகள் மற்றும் ஆய்வு சேவைகளை வழங்குவதற்கான வழிநடாத்தும் திறன் ஆகியன அவசியமாகின்றன. மேலும், அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்தில் பணியாற்றுபவர்களிடையே வளப்பெறுகையில் சுதந்திரத்தைப் பேணுவதற்கும், திறமையான மற்றும் நியாயமான வழக்கு தொடரப்படுவதை உறுதி செய்வதற்கு அவர்களுக்கான பயிற்றுவிப்பு மற்றும் திறன்மேம்பாடு மேற்கொள்வதற்குமான தகுதி இருக்க வேண்டும்.

**பொறுப்புக்கூறல்**

அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகமானது வழங்கப்பட்ட வளங்களை எவ்வாறு பயன்படுத்துகிறது மற்றும் அதன் செயல்பாடுகளை எவ்வாறு மேற்கொள்கிறது என்பது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். தற்போதுள்ள செயற்குழு அமைப்புமுறையை எவ்வாறு இந்த சுயாதீன நிறுவனம் மீது திறனுள்ள வகையில் மேற்பார்வையினை மேற்கொள்வதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது தொடர்பில் பாராளுமன்றம் பரிசீலனை செய்ய வேண்டும். அத்தகைய (மேற்பார்வையினை மேற்கொள்ளும்) செயற்குழுவானது ஒரு பக்கச்சார்புடையதாக இருக்கக்கூடாது என்பதோடு அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சமமான பிரதிநிதித்துவத்தினையும் வழங்க வேண்டும்.

## 6. சுயாதீனமான அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்திற்குப் பரிந்துரைக்கப்படும் சில கட்டமைப்புச்சார் அம்சங்கள் யாவை?

ஒரு அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்தை நிறுவுவதானது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினூடாக மேற்கொள்ள்ளப்பட வேண்டும் என ஊீயு வலியுறுத்துகிறது. மேலும் அது குற்றவியல் நீதி பரப்பிற்குள் நன்கு அனுபவமுள்ள பலதரப்பட்ட பற்றாளர்களை கொண்டதாகவும் தேவையான கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகளுடன் அதன் நோக்கத்தை அடைய நேர்மையான முறையில் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யவும் வேண்டும் என வலியுறுத்திகிறது. இதற்கு முன்னர், சுயாதீனமான அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகத்திற்கு தேவையான சட்ட மற்றும் கட்டமைப்பு வடிவமைப்பிற்கான தனது பரிந்துரைகளை ஊீயு வழங்கியிருந்தது. அதன் பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும்

அ. அரசதரப்பு சட்ட வழக்குரைஞர் அலுவலகமானது பணிப்பாளர் மற்றும் அலுவலக ஊழியர்களின் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆ. அரசியலமைப்பு பேரவையின் அனுமதிக்கு கட்டுப்பட்டு வெளிப்படையான நடைமுறையொன்றினூடாக குறித்த அலுவலகத்தின் பணிப்பாளர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். அத்தகைய நியமனங்கள் அனைத்தையும் பரிசீலிப்பதில் ஒரு வெளிப்படையான

அங்கீகரித்த செயல்முறையை அரசியலமைப்பு பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு இது அரசியலமைப்பு சபையின் ஒழுங்குவிதிகளால் வழங்கப்படவும் வேண்டும்.

இ. பணிப்பாளரானவர் சட்டப் பயிற்சியில் குறைந்தபட்சம் 20 வருட அனுபவம் கொண்ட ஒருவராக இருக்க வேண்டும் மற்றும் வழக்குத்தொடுத்தலில் முன் அனுபவங்களை பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

ஈ. பணிப்பாளரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளுக்கு மிகாமல் இருப்பதற்கும், ஆனால் அவர்.்.அவள் மீள்நியமனத்திற்கு தகுதியுடையவராக இருப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

இ. அலுவலகத்திற்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள்ளும்போது, அலுவலகத்தின் ஆள் கூட்டமைவானது பாலினம் உள்ளிட்ட இலங்கை சமூகத்தின் பன்முகத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் மொழிக்கு முதன்மையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, இலங்கையில் உள்ள அனைத்து நீதித்துறை பிரிவுகளிலும் செயல்படுவதனை உறுதிசெய்யும் வகையில் குறித்த அலுவலகமானது பொருத்தமான பணியாற்றுபவர்களை கொண்டிருப்பதனை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் நாணயம்மிக்க நபர்களாக இருக்க வேண்டும் என்பதோடு அலுவலகத்தின் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான போதுமான அனுபவம் மற்றும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் அவசியமாகும்.

உ. நலன்கள் முரண்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, பணிப்பாளர் மற்றும் சட்டப் பயிற்சியாளர்களான அலுவலக ஊழியர்கள் தத்தமது அலுவலக கடமைகளுக்குப் புறம்பாக சட்டப் பயிற்சியாளராக ஈடுபடவோ அல்லது அவரது அலுவலகக் கடமைகளுக்குப் புறம்பாக ஊதியம் பெறும் ஒரு துறையில் ஈடுபடவோ கூடாது.

## 7. இதுபோன்ற மாதிரிகள் உலகில் வேறு எங்கும் சிறப்பாக இயங்கியுள்ளனவா?

உலகெங்கிலும் உள்ள ஜனநாயகம்சார் சமூகங்களில் அரசதரப்பு சட்ட வழக்குதத்தொடுப்பு ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. இது மேலும் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜப்பான், ஹொங்காங், ஸ்லோவேனியா மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில் அந்நாடுகளின் தனித்துவமான ஒப்பீட்டளவு சூழல்களில் பல நேர்மறையான கூறுகளை காணக்கூடியதாக உள்ளது. இந்த மாதிரிகளின் விரிவான பகுப்பாய்வானது கீழே வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊீயு மிகவும் விரிவாக எழுதியுள்ளதுடன், மேலும் இந்த விடயம் தொடர்பான விரிவான கலந்துரையாடலானது 2020 நவம்பர் மாதம் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தால் வெளியிடப்பட்ட "இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தை மறுபரிசீலனை செய்தல் : சீர்திருத்தத்திற்கான யோசனைகள்" என்ற தலைப்பிலான அறிக்கையில் காணக்கூடியதாக இருக்கும்.